Registered as a Newspaper in Ceylon ✱ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (2-11-65) இதழ் 263

விசுவாவசு ஐப்பசி 17 றஜபு பிறை 7 செவ்வாய்க்கிழமை

## வானில் தெரியும் வால் நட்சத்திரம்
### வெடித்துப் பிளந்த 'இக்யி அஸேகி'யின் ஒரு பகுதியா?

யாழ்ப்பாணம், செவ். கடந்த ஒருவார காலமாக இலங்கையின் பல பாகங்களிலும் சுமார் 10—15 அடி நீளமுள்ள வால் நட்சத்திரம் ஒன்று அதிகாலையில் கிழக்கு வானத்தின் தென்பாகத் திசையில் தென்படுவதாக எமது நிருபர்களிடமிருந்து செய்திகள் கிடைத்துள்ளன.

தென்மாகாணம், மேல் மாகாணம், வடமாகாணம் (வன்னிப்பகுதியுட்பட) ஆகிய மூன்று மாகாணங்களிலுமுள்ள பல நிருபர்கள் இந்த வால்நட்சத்திரம்பற்றி செய்திகள் அனுப்பியுள்ளனர். சிலர் 10 அடி நீளமுள்ளதெனவும் சிலர் 15 அடி நீளமுள்ளதெனவும் வேறுபட்ட நீளத்தைக் குறிப்பிட்டபோதிலும் குறிப்பிட்ட வால்நட்சத்திரம் அதிகாலையில்சுமார் 4—5 மணியளவில் தென்படுவதாகவும் கிழக்குத் திசையிலேயே தோன்றி வருவதாகவும் நிருபர்கள் ஒரேமாதிரி தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் உள்ள வானிலை ஆராய்ச்சி நிலையத்தினர் இதுபற்றித் தெரிவிக்கையில், மற்ற நாடுகளிடமிருந்து இதுவரை வால்நட்சத்திரம் பற்றிய செய்தி எதுவும் கிடைக்கவில்லையென்றும்

(6-ம் பக்கம் பார்க்க)

# வெலிமடைத் தொகுதி தேர்தல் செல்லாது

## ஆட்சேபமனுவை நீதிபதி ஏற்றார்

வெலிமடை, திங்கள்

**வெலிமடை தொகுதிக்கு பாராளுமன்ற அங்கத்தவராக திரு. பி. டபிள்யு. சமரவீர தெரிவுசெய்யப்பட்டது தகுதியற்றதென்று அறிவிக்கப்பட்டுள்ளது. தாக்கல்செய்யப்பட்ட தேர்தல் ஆட்சேபனை வழக்குகளில் நிருபிக்கப்பட்ட முதலாவது வழக்கு இதுதானென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.**

கடந்த பொதுத்தேர்தலில் வெலிமடைத்தொகுதியில் ஜாதிக விமுக்திபெரமுனை தலைவர் திரு. கே. எம். பி. ராஜரத்னவும், திரு. டபிள்யு. பேர்ஸி சமரவீராவும் நேரடியாகப் போட்டியிட்டனர். இத்தொகுதியில் திரு. சமரவீரா தெரிவுசெய்யப்பட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து திரு. சமரவீரா வெற்றிபெற்றது செல்லுபடியாகாது என்று கோரி தேர்தல் ஆட்சேபமனு தாக்கல்செய்யப்பட்டது.

தேர்தல் ஆட்சேபனை வழக்கை விசாரணை செய்த நீதிபதி தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்து குறிப்பிட்ட தொகுதியின் அங்கத்தவர் தெரிவு தகுதியற்றது என்று இன்று அறிவித்தார்.

பாராளுமன்ற அங்கத்தவர் சிலரின் தெரிவை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட பல வழக்குகள் விசாரணை செய்யப்பட்டன. இதுவரைகாலமும் விசாரணை செய்யப்பட்ட வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன. நிரூபிக்கப்பட்ட முதலாவது வழக்கு இதுவேயாகும். இன்னும் பல வழக்குகள் விசாரணை செய்யப்படவிருக்கின்றன.

வெலிமடைதொகுதி தேர்தல் ஆட்சேபனை வழக்கு நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து இத்தொகுதியில் இடைத்தேர்தல் நடைபெறவிருக்கிறது.

திரு. டபிள்யு. பி. சமரவீரா முன்னர் சுயேச்சை அங்கத்தவராக போட்டியிட்டு தெரிவுசெய்யப்பட்ட பின்னர் ஐக்கியதேசி கட்சியில் சேர்ந்தார். அப்பீல் செய்ய இவருக்கு உரிமை உண்டு.

—

## குருநகர் மீன்பிடித்துறை அமைப்பு மாதிரிப்படம்
### மீன்பிடிமந்திரி பார்வையிட்டார்

— நமது நிருபர் பாலா —

யாழ்ப்பாணம், செவ். குருநகரில் புதிதாக ஸ்தாபிக்கப்படவிருக்கும் துறைமுகத்தின் மாதிரிப் படமொன்றை நேற்று அங்கு விஜயம் செய்த மந்திரி திரு. குணவர்த்தன பார்வையிட்டார். இம்மாதிரிப் படத்தை மீன்பிடி இலாகா அதிகாரிகள் அங்கு கொண்டுவந்திருந்தனர்.

வள்ளங்களைக் கரைக்குக் கொண்டுவருவது, வள்ளங்களிலிருந்து நேரடியாக மீன்களைக் கரைசேர்ப்பது போன்றவைகளுக்கு புதிதாக ஸ்தாபிக்கப்படும் மீன்பிடித்துறைமுகம்வசதியளிக்கும் என்பதையும் சுட்டிக் காட்டினார்கள்.

ஐஸ் உற்பத்தியையும் யந்திரசாலையையும், இதரபகுதிகளையும் மந்திரி சென்று பார்வையிட்டார்.

இங்கு விஜயம் செய்வதற்கு முன்னர் குருநகர் மக்கள், மந்திரிக்கு ஒரு வரவேற்புபசாரமளித்தனர். உடுப்பிட்டித் தொகுதி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், திரு. ஸி. எக்ஸ். மார்டின் உட்பட அனேகர் இதில் கலந்துகொண்டனர்.

இப்பகுதியிலுள்ள மக்களுடைய குறைகளைப்பற்றி யாழ் முனிசிப்பல்சபை அங்கத்தவர் திரு. எம். எஸ். பேரின்பநாயகம் எடுத்து விளக்கிக் கூறினார்.

வீட்டுவசதியின்மை, தண்ணீர்தட்டுப்பாடு, சூறுவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி கிடைக்காமல் போனது போன்றவைகளைப் பற்றி விளக்கிக்கூறிய திரு. பேரின்பநாயகம் பரம்பரை பரம்பரையாக இப்பகுதியில் வாழ்ந்துவந்த மக்களுக்குப் பாதுகாப்பளிப்பது அரசாங்கத்தின் கடமையென்பதையும் சுட்டிக் காட்டினார்.

மந்திரி திரு. குணவர்த்தன பேசுகையில், வடக்கில் வாழும் மக்கள் ஒவ்வொருவரும் இந்தநாட்டின் நலனைக் கருதி தெற்கிலுள்ளவர்களுடன் ஒத்துழைக்கவேண்டும். அதுமாத்திரமல்ல. ஒவ்வொருவரும் வருங்காலத்தை வளம்படுத்துவதற்காக கடின உழைப்பிலிறங்க வேண்டும் என்று கூறினார்.

திரு. குணவர்த்தன தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

தேசிய அரசாங்கம் இந்த நாட்டில் ஒரு ஒற்றுமையான

(6-ம் பக்கம் பார்க்க)

## மாணவர்கள் நாற்று நட்டனர்

வவனியா, திங்கள்

அரை ஏக்கர் காட்டை வெட்டி அதில் ஜப்பானிய முறையில் நாற்று நடுவதில் வவனியா தமிழ் மகாவித்தியாலய மாணவர்கள் ஈடுபட்டனர். வித்தியாலய அதிபர் திரு. இராசநாயகம் விவசாய விஞ்ஞான அசிரியர் திரு.வி. சுந்தரலிங்கமும் இதை முன்னின்று நடத்தினர்.

வவனியா மாவட்டத்திலேயே இந்தப் பாடசாலை தான் இவ்விதம் பயிர்நடுவதில் மாணவர்களை ஈடுபடுத்தி மற்றப் பாடசாலைகளுக்கு ஒரு முன்னோடியாக விளங்குகிறது.

—

## 'இசைக் கலைஞரை நியமிக்குக'

வவனியா, திங்கள்

வவனியா மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு இசை ஆசிரியர்களை நியமிக்குமாறு வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் கல்வி மந்திரிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் கோரியுள்ளார்.

இசைக்கலையை வளர்ப்பது, நாட்டில்கூடிய விளைச்சலைப் பெறவும், வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கவும் வழிசெய்யும் எனவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உழைப்பாளிகளை புயலுக்கு பலி கொடுத்த 3 குடும்பம்
### மந்திரியைச் சந்தித்ததால் உடனடி நிவாரணம் பெறுவர்

யாழ்ப்பாணம், செவ். சென்ற வருடம் சூறுவளியின்போது உயிரிழந்தமூன்று மீனவர்கள் குடும்பங்களை யாழ்ப்பாணம் விஜயம் செய்திருக்கும் மந்திரி திரு. பிலிப் குணவர்தன நேற்று ஆனைக்கோட்டையிலுள்ள சாவற்காடு என்ற இடத்துக்கு விஜயம் செய்தபோது சந்தித்தார்.

மூன்று குடும்பத்தினரும் தமது கைக் குழந்தைகளுடன் பரிதாபமான நிலையில் மந்திரியைச் சந்தித்தார்கள்.

கணவன்மார்களை இழந்த இளம் குடும்பத்தினர்களுடைய சோகக்கதையைக் கேட்ட மந்திரி அங்கு அவருடன் கூடவந்திருந்த மீன்பிடிக் கைத்தொழிற் கார்ப்பரேஷன் தலைவர் திரு. சாம் சில்வாவிடம் கொழும்பு திரும்பியதும் உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

பரம்பரை பரம்பரையாக மீன்பிடித் தொழிலையே தமது தொழிலாகக் கொண்டுள்ள மக்களை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளை தவிர்த்து புனர்வாழ்வளிக்க வேண்டிய காலம் வந்துவிட்டதாக திரு. குணவர்தன தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு பதிலளித்துக் கூறுகையில் தெரிவித்தார்

சாவற்காடு மீனர்களினால் உடுவில் எம் பி. திரு. வி. தர்மலிங்கம் தலைமையில் நடத்தப்பட்ட வரவேற்பில் மந்திரி திரு. குணவர்தன பேசுகையில் மேலும் கூறியதாவது:-

இன்று சிங்களவர்களும், தமிழர்களும் நாட்டு நலனைக் கருதியும், பொருளாதார சுதந்திரத்தைப் பலப்படுத்தவும் தான் தேசிய அரசாங்கத்தை ஸ்தாபித்துள்ளார்கள். இதைவிட இன்னும் ஒன்று முக்கியமாகவுள்ளது. சென்ற அரசாங்கம் மக்களை சின்னபின்னபடுத்தி சீர் குலைத்துவிட்டது. லஞ்ச ஊழல்களில் தேறித் திளைத்துப் போயிருந்த ஒரு அரசாங்கத்தை மாற்றியமைக்க வேண்டுமென்றும் இந்த இரண்டு சமுதாயத்தி..டும் சங்கர்ப்பம் செய்து கொண்டார்கள். இப்படியான ஊழல் நிறைந்த ஒரு அரசாங்கத்தை நாட்டு மக்களின் மந்தியிலில்லாமல் செய்வது நாட்டுக்கே நல்லபலனளிக்கும் என்பதையும் உணர்ந்து தான் அதை இருந்த இடம் தெரியாமல் குலைத்து தேசிய அரசாங்கத்தை உருவாக்கியுள்ளோம்.

நாட்டின் வளர்ச்சியில் தீவிரமான மாறுதல்களைச் செய்ய தேசிய அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. இந்த மாறுதல்களைச் செய்தால் தான் நாடு முன்னேற்றமடையும்.

மீனவர்களின் எண்ணங்களையும், மீன்பிடிக்கும் பழைய முறைகளையும் மாற்றியமைத்து புனர்வாழ்வளிக்க வேண்டுமென்ற எனது ஆவல்விரைவில் நிறைவேறுமென எதிர்பார்க்கிறேன்.

### மீனவர்களுக்கு புனர்வாழ்வு

உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் மந்திரியை வரவேற்றுப் பேசுகையில் கூறியதாவது:-

வடபகுதி மீனவர்களுடைய பிரச்னைகள் கொஞ்சமன்று. வாழ்க்கையில் வரக்கூடிய கண்டங்களை எல்லாம் அவர்கள் அனுபவித்துக் களைத்துப்போனார்கள். இனிமேல் எந்தக் கஷ்டத்தையும் எதிர்த்துப் போராட முடியாத நிலையிலிருக்கும் மீனவர்களுக்கு புனர்வாழ்வளித்தேயாகவேண்டும். மந்திரியாரின் கவனத்துக் கொண்டுவந்த குறைகளை அவர் நிவர்த்திப்பாரென நம்புகிறேன்.

நாட்டின் பலபகுதிகளிலுமுள்ள குறைகளைப்பற்றி இதுவரையில் விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளோம். இக் குறைகளை விரிவான அடிப்படையில் ஆராய வடபகுதி எம் பி. க்களுடைய மகாநாடொன்றை கூட்டும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். அந்த மகாநாடு புனர்வாழ்வுத் திட்டம் போன்ற ஒன்றை திருப்திகரமாக அமுல் நடத்த உதவியாக விருக்கும்.

### 'தொழிலாளர் தந்தை'

சென்ற சூறுவளியில் தமது கணவர்களை இழந்த முத்தம்மா ராசாத்தம்பி (2 குழந்தைகள்) பொன்னுபர

(6-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

இறைவன் இணையடி நோக்கி உனது மனத்தைத் திருப்பினல் அன்றி நீ எங்கிருந்தாலும் எந்தப் பொருளையோ, இலட்சியத்தையோ குறித்து மனதைச் செலுத்தினலும் நீ துயரத்திலேயே மூழ்கியவன் ஆவாய். (இராமகிருஷ்ண விஜயம்)


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஐப்பசி மீ 17 உ (2-11-65)


## ஆங்கிலக் கல்வி

இலங்கையிலுள்ள சகல பாடசாலைகளிலும் அடுத்த வருடத்திலிருந்து ஆங்கிலம் கட்டாயமாக இருக்குமென்று கல்வி அமைச்சர் திரு. இரியகொல்ல லண்டனில் கூறியிருக்கிறர். ஆங்கில ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கவும் கல்விஅமைச்சர் பிரிட்டனின் உதவியைக் கோரியிருக்கிறர். இது நல்ல செய்தி.

ஆங்கிலம் உலக மொழிகளில் ஒன்று. உத்தியோகம் பெறுவதற்கில்லாவிட்டாலும் உலகஞானம் பெறுவதற்கும் ஆங்கிலம் அவசியம். இன்று நாட்டிலுள்ள 9,327 பாடசாலைகளில் கல்விகற்கும் சுமார் இருபத்தைந்து லட்சம் இளம் சந்ததியினர் ஆங்கிலத்தில் போதிய அறிவு பெறக்கூடிய வாய்ப்பில்லாமல் உள்ளனர். தேசியம் பேசுவதன் மூலம் இவர்களை வெறும் கிணற்றுத் தவளைகளாக வைத்திருந்தால் வருங்காலத்தில் அவர்கள் தங்கள்முன் சந்ததியினரைச் சபிப்பார்கள். தேசியவாதமும் போலித் தேசியவாதமும் இந்நாட்டில் ஆங்கிலக் கல்வியின் தரத்தின் கீழ் நிலைக்குக் கொண்டுவந்து விட்டது. தேசியம் பேசிய தலைவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ஆங்கிலக்கல்வி பெறுவதற்கான வசதிகளைச் செய்து கொடுத்துள்ளனர். இதை இன்று பொதுமக்களும் நன்குணர்ந்து கொண்டுள்ளனர். ஆரம்ப வகுப்புக்களிலேயே ஆங்கிலக்கல்வி அளிக்கப்படாததன் விளைவுகளை சர்வகலாசாலையில் கல்வி பெறச் செல்லும் பொழுதுதான் மாணவ மாணவியர் அனுபவிக்க நேரிடுகிறது. ஆங்கிலக் கல்வி பெருமல் சர்வகலாசாலையில் நுழையும் மாணவ மாணவியர்கள் மட்டுமல்ல அவர்களுக்கு விரிவுரை நிகழ்த்த வேண்டிய சர்வகலாசாலை விரிவுரையாளர்களும் போதனுசிரியர்களும்கூடக் கஷ்டப்பட வேண்டியுள்ளது.

ஆங்கிலக் கல்வியின் தரம் இந்நாட்டில் வீழ்ச்சியடைந்துள்ளதற்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் பற்றுக்குறையும் ஒரு காரணமாகும். ஆங்கிலப் பாடம் போதிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள 17,000 ஆசிரியர்களுள் 1,700 ஆசிரியர்கள்தான் ஆங்கில மொழி போதிப்பதற்கென பயிற்சி பெற்றவர்களாகும். இந்த பதினேழாயிரம் ஆசிரியர்களுள், ஆங்கிலப் போதிப்பதற்காக, அவசரத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஆங்கில உதவியாசிரியர்களே அதிகம். இவர்கள் சிரேஷ்டதராதரப் பத்திரக்கல்வி சித்தியடைந்ததும் ஆங்கில உதவி ஆசிரியர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களுக்குக் கல்வித் தராதரமும் குறைவு; பயிற்சியுமில்லை. இந்நிலையில் மாணவர்களின் ஆங்கில அறிவை வளர்க்கவும், ஆங்கிலக் கல்வியின் தரத்தை உயர்த்தவும் எப்படி எதிர்பார்க்கமுடியும்? பாடசாலைகளில் கல்வி பெறும்போதே ஆரம்ப வகுப்பிலிருந்து ஆங்கிலக் கல்வியும் அளிக்கப்பட்டு வந்தால் சர்வகலாசாலைப் பிரவேசத்திலும் உயர் வகுப்புகளிலும் மாணவ மாணவியர் அதிகம் சிரமப்படவேண்டியேற்படாது. ஆங்கிலக்கல்வியின் தரம் குறைந்ததற்கு அந்த மொழியைப் போதிப்பதற்குப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் குறைவாக இருப்பது மட்டுமன்றி பாடப்புத்தகங்களும் அதற்கேற்ற வகையில் இல்லாதிருப்பதும் ஒரு காரணமாகும்.

ஆங்கிலக்கல்வி அவசியம். ஆனலும் இந்நாட்டுத் தேசிய மொழியின் வளர்ச்சியையும் தேசிய கலாச்சாரத்தையும் பாதிக்காதவகையில் ஆங்கிலக்கல்வி அளிக்கப்படவேண்டும். இதைக் கல்விஅமைச்சர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## இறக்குமதி வர்த்தகத்தில் மோசடி

இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் பலர் பெரும் மோசடிகள் செய்வதாகவும், இதனல் வாழ்க்கைச் செலவு உயர்ந்திருப்பதாகவும், இந்த மோசடிகள் இறக்குமதிக் கட்டுப்பாட்டு இலாகாவினல் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் விஷம்போல் ஏறுவதற்கும், இப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கும், இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளவர்களே பெரும்பாலும் காரணமெனக் கூறப்படுகிறது. இதில் உண்மை இல்லாமலிருக்க முடியாது.

முன்னைய அரசாங்கம் ஆட்சியில் இருந்தபோது தனியார் துறையினரின் இறக்குமதி வர்த்தகம் சிறிதுசிறிதாக நசுக்கப்பட்டு அரசாங்க கூட்டுஸ்தாபனங்களிடம் இறக்குமதி வர்த்தகம் ஒப்படைக்கப்பட்டது. நாட்டின் பொருளாதாரக் கஷ்டங்கள் நீங்குவதற்கும் வாழ்க்கைச் செலவு உயர்வைத் தடுப்பதற்கும், தங்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்றும் தனியார் துறையினர் கேட்டுக்கொண்டனர். தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்ததும் தனியார்துறையினருக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டதுடன்சலுகைகளும் அளிக்கப்பட்டன. இலங்கையரான வர்த்தகர்களுக்கு இறக்குமதி லைசென்ஸ் வழங்கப்பட்டுள்ளன. ஆனல் இந்த வர்த்தகர்கள் பொதுமக்களின் நலனையோ நாட்டின் நலனையோ கருத்தில்கொண்டதாகத் தெரியவில்லை. முன்னைய அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் 'இழந்தவைகளை' மீண்டும் பெறுவதிலேயே கருத்துக் கொண்டுள்ளதாக தோன்றுகிறது. இறக்குமதி வர்த்தகத்தைச் சரிவரச் செய்யக்கூடியவர்களுக்கே இறக்குமதி லைசென்ஸ் வழங்குவதுடன், நாட்டின் நலனிலும், பொதுமக்கள் நலனிலும் அக்கறைகொள்ளாததனியார் துறையினர்மீது தயவுதாட்சண்யம் காட்டவும் கூடாது.

## வடபகுதியின் பல கிராமங்களுக்கு கைத்தொழில் மந்திரி விஜயம்

வல்வெட்டித்துறை, திங்.

வல்வெட்டித்துறையில் மிகப் பழமைவாய்ந்த துறைமுகம் இருக்கிறது. இங்குள்ளவர்கள்வீரர்களிலும்வீரர். கடின உழைப்பும் விடாமுயற்சியுமுடையவர்கள். எல்லா சமுத்திரங்களையும் கட்டியாண்ட இவர்களுக்கு இந்து சமுத்திரம் ஒரு விளையாட்டாகவே இருக்கிறது. இரண்டாம் மகாயுத்தத்திற்குப்பின் உணவு இறக்குமதியை அரசாங்கம் கையேற்றதால் இவர்கள் தொழிலிழந்து வாழ வழியில்லாமல் சிலசட்டத்திற்கு மாருன தொழிலில் ஈடுபடவேண்டிய நிலைமையேற்பட்டது. இற்றைவரையுள்ள அரசாங்கமும் எதிர்மறையான கருத்துடனேயே இவர்களை நோக்கி வந்தது. சோஷலிசவாதியும் புரட்சிவாதியுமான நீங்கள் இவர்களின் கஷ்டங்களை நீக்க இப்பகுதிக்கு ஒரு தொழில் பேட்டையை அமைத்து வேலையற்றிருக்கும் மக்களுக்கு உதவியளிக்கவேண்டுமென வேண்டுகிறேன். இற்றைக்கு 30 வருடங்களுக்குமுன் வல்வெட்டித்துறையில் செய்யப்பட்ட கப்பல்களில் இந்தியா, பர்மா, அரேபியா ஆகிய பிற நாடுகளுக்கும் அமெரிக்கா முதலிய மேலை நாடுகளுக்கும் உள்ளூர் மாலுமிகள் கடலோடி இலங்கையிலேயே மிக சிறந்தவர்கள் என மேலை நாட்டவர் உட்பட பலராலும்போற்றப்பட்டவர்கள்' என்று பருத்தித்துறை எம். பி. திரு.கே. துரைரத்தினம் வல்வெட்டித்துறை மக்கள் சார்பிலும், வல்வை சனசமூக நிலைய சார்பிலும் கைத்தொழில் மீன்பிடி மந்திரி திரு. பிலிப் குணவர்த்தனவுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு தலைமை வகித்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு.பிலிப் குணவர்த்தன பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

உங்கள் பாராளுமன்ற உறுப்பினரான திரு. துரைரத்தினம் கூறியபடி நான் இப்பகுதிக்கூடாகவே பிரிட்டிஷ் ஆட்சியாளரின் கொடுமைகளைத் தாங்கமுடியாது செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இவ்விடத்தில் சனப்பெருக்கம் பெருகிக்கொண்டு வருகிறதென்றும் அதற்கேற்ற தொழில் வாய்ப்பு இல்லையென்றும் கூறினர். திருமதி பண்டாரநாயகா அரசாங்கம் தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகள் பலவற்றையும் தீர்க்கத் தவறிவிட்டது. இப்பொழுது சிங்களமக்களும் தமிழ் மக்களும் ஒன்று சேர்ந்து தேசீய அரசாங்கத்தை ஏற்படுத்தி யிருக்கிறர்கள். தேசீய அரசாங்கம் உங்கள் பிரச்னைகள் யாவற்றையும் கூடிய விரைவில் தீர்த்து வைக்கும். நீங்கள் இவ்விடத்தில் சிறு வள்ளங்களைக் கொண்டு மீன்பிடித்து சீவனம் செய்து வருகிறீர்கள். நாட்டின் பொருள் வளத்தைப் பெருக்குவதற்கும் உங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குமாக பாரிய கப்பல்களைக் கட்ட முயற்சிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மந்திரி அவர்கள் தொண்டமாறு உப்புமால் கடற்கரையில் மீன்பிடித்துறைமுகம் அமைக்கப்படவிருக்கும் நிலையத்தைப்பார்வையிட்டபின் ஆதிகோவிலடி, இன்பருட்டி வல்வை வள்ளங்கள் கட்டும் நிலையம், பருத்தித்துறை துறைமுகம் ஆகியவற்றைப் பார்வையிட்டுச் சென்றர்.

### பருத்தித்துறையில்

பருத்தித்துறை மணல்காடு மக்களால் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்குப் பதிலளித்துப் பேசுகையில் திரு. குணவர்த்தன குறிப்பிட்டதாவது:-

கடந்த 10 ஆண்டுகளாக தமிழ் பேசும் சமுதாயம் பல கஷ்டங்களை அனுபவிக்கவேண்டி ஏற்பட்டது. கடந்த கால அனுபவங்களைக் கொண்டு ஒருமித்து வாழும் கொள்கைகளில் இன்று நமக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. எனவேதான் இந்த நாட்டில் சகல இன மக்களையும் ஒன்று படுத்துவதற்காகவே தேசிய அரசாங்கத்தை அமைத்தோம். சிங்களவர் தமிழர் என்ற பாகுபாடின்றி அனைவரும் ஒன்ருக வாழ வேண்டும் என்ற எமதுஇலட்சியத்தை தேசீய அரசாங்கம் கொண்டுள்ளது.

நமது அரசாங்கம் மீன்பிடித் தொழிலாளரை ஊக்குவிப்பதிலும் அவர்களின் குறைகளை நிவர்த்திசெய்வதிலுமே கவனம் செலுத்தி வருகிறது. மீன்களின்மத்தியில் வாழும் நாம் வெளிநாடுகளிலிருந்து மீன் இறக்குமதிசெய்வது வெட்கத்துக்குரியதாகும்.

### கற்கோவளத்தில்

கற்கோவளம் கடற்றொழிலாளர்களின் வீடுகளுக்கு அயலில் ராணுவத்தினரின் நிலையம் அமைந்திருப்பதையும் நேரில் பார்வையிட்டபின் இலங்கையில் எவ்விடத்திலும் இப்படியான சூழலில் ராணுவ நிலையம கட்டப்படவில்லை யென்றும், இதனல் இரவு நேரங்களில் மீனவர்கள் கடற்றொழிலுக்குச் சென்றபின் பெண்கள் தினமும் இராக்காலங்களில் பயந்த சூழ்நிலையில் இடுக்க வேண்டிய நிலையில் இருப்பதையிட்டு நான் பாராளுமன்றத்தில் எடுத்துரைப்பதாகவும் அப்பகுதி மக்களுக்கு மந்திரி வாக்குறுதி அளித்துள்ளார்.

### வதிரியில்

இதன் பின்னர் வதிரி கூட்டுறவுச்சப்பாத்துத் தொழிற்சாலைக்கு மந்திரி உடுப்பிட்டி எம். பி. சிவசிதம்பரம், பருத்தித்துறை எம். பி. க. துரைரத்தினம் சகிதம் விஜயம் செய்து தொழிற்

(6ம் பக்கம் பார்க்க)

## மகாதேவ அடிகள் குருபூசை

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் கந்தர் மடத்திலுள்ள வேதாந்த மடத்தின் தலைமைப்பீடத்தில் வீற்றிருந்த மகாதேவ சுவாமிகளின் குருபூசை இன்று செவ்வாய்க்கிழமை வேதாந்தமடத்தில் பூசை, கூட்டுப்பிரார்த்தனை, சொற்பொழிவு முதலிய நிகழ்ச்சிகளுடன் கொண்டாடப்படுகிறது.

வெள்ளவத்தை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் ஸ்ரீரங்கானந்த சுவாமிகளும் உருத்திரபுரத்தில் மகாதேவ அடிகள் ஆசிரமத்தை ஸ்தாபித்து நடத்திவருபவரும் சுவாமியின் சீடருமான ஸ்ரீ வடிவேல் சுவாமியும் இவ்வைபவத்தில் சொற்பொழிவாற்றுவர்.

## ஐயாறன் எழுதுவது

இனி டாக்டர் என். எம். பெரேரா தேசிய அரசாங்கத்தில் சேர்ந்துவிடுவாரா? இந்தப் புதிய வதந்தி இப்போது அரசியல் வட்டாரங்களில் அடிபடுகிறது. காரணமென்ன தெரியுமா?

சென்ற சனிக்கிழமையன்று கொழும்பு மாநகர சபையின் நூற்றுண்டுவிழா கொண்டாட்ட சம்பந்தமாக ஒரு விசேஷ கிரிக்கெட் விளையாட்டு நடந்தது. பிரதமர் டட்லியைத் தலைவராகக்கொண்ட பார்லிமெண்ட் கோஷ்டிக்கும், மேயர் வின்ஸெண்ட் பெரேரா தலைமை பூண்ட மாநகர சபை கோஷ்டிக்கும் நடந்த அந்த விளையாட்டிலே பிரதமர் கட்சியில் டாக்டர் என். எம். சேர்ந்து விளையாடி, பிரதமருடன் ஒத்துழைத்து, வெற்றியையும் ஈட்டித்தந்தார்! எதிர்க்கட்சித் தலைவர் ஸ்ரீமாவும் கம்யூனிஸ்ட் தலைவர் கெனமனும் அங்கிருந்து இந்த விளையாட்டைப் பெரிதும் ரஸித்தனர்.

பார்லிமெண்ட் சபையிலே நெருப்பெடுக்கும் என். எம்.மும் பல திர்க் கட்சியினரும் இந்த கிரிக்கெட் விளையாட்டிலே பிரதமருடன் சேர்ந்து ஒத்துழைத்து விளையாடியது ஒரு சந்தோஷமான அபூர்வக் காட்சி. அரசியலில் எவ்வளவு போட்டிகளும் வேற்றுமைகளும் இருப்பினும், தனிப்பட்ட முறையில் தங்களிடையே எவ்வித கசப்பும் விரோதமும் இல்லையென்பதை இரு தரப்பினரும் இதன்மூலம் காட்டியுள்ளனர். இலங்கையிலே ஜனநாயகம் மிக மேலான முறையில் நடைபெறுகிறதென்பதற்கு இது நல்லதோர் அத்தாட்சியுமாகும்!

ஃ ஃ ஃ

கிரிக்கெட் விளையாட்டிலே பிரதமருடன் சேர்ந்து விளையாடியதால், தேசிய அரசாங்கத்தில் டாக்டர் என். எம். சேருவாரென்று எப்படிக் கூறமுடியும் என்ற கேள்வி எழுகின்றது.

ஸ்ரீமாவின் கூட்டு மந்திரி சபையிலே டாக்டர் என். எம். சேருமுன்பாக, நுவரேலியாவில் ஒரு கிரிக்கெட் விளையாட்டு நடந்தது. அதில் ஸ்ரீமாவின் புதல்வர் அனுராவுடனே டாக்டர் என். எம். கிரிக்கெட் விளையாடினர். அவ்விளையாட்டு, இரு தரப்பினருக்கும் நெருங்கிய நல்லுறவு இருந்ததென்பதைக் காட்டியதுடன், சில வாரங்களால், என். எம். கூட்டு மந்திரி சபையில் சேர்ந்தும்விட்டார்.

அதேபோல் இப்போது கிரிக்கெட் விளையாட்டிலே பிரதமர் டட்லியுடன் என். எம். அனில் முதலிய எதிர்க்கட்சியினர் விளையாடியுள்ளதால், இவர்கள் டட்லியின் தேசீய மந்திரிசபையில் சேர்ந்துவிடுவரென்பதற்கு இது நல்லதோர் அறிகுறி என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றர்கள் போலும்!

இந்தச் சோதிடம் பலித்தால் மிக நல்லதுதான். அரசியல் எதிரிகளிடையேயும் நல்லுறவு ஏற்படுத்த கிரிக்கெட் விளையாட்டு எவ்வளவு உதவுகிறது! நம் அரசியல் தலைவர்களிடையே மனக்கசப்புகள் இல்லாமலிருப்பது பெரிய காரியம். இதே மனப்பான்மை நீடிப்பின், இலங்கையிலே ஜனநாயகம் வெற்றிகரமாக நடக்கவும், நாடு அமைதியுடன் முன்னேறவும் முடிவதுடன் இலங்கை மற்ற நாடுகளுக்கு மேலான முன்மாதிரியாகவும் இருக்கலாமல்லவா?

(5-ம் பக்கம் பார்க்க)

# மத்திய ஜாவாவில் உள்நாட்டு யுத்தம்

## கம்யூனிஸ்டுகள் பலம் அதிகரிக்கிறது

### இந்தோனேஷிய திடீர்புரட்சி: கம்யூனிஸ்ட் ஆட்சி நிறுவுவதே நோக்கம் என்றுராம் உண்டுங்

கோலாலம்பூர், நவ. 1

மத்திய ஜாவாவில் ஜாடிமா, மனிஸ்ரெங்கா ஆகிய இரண்டு பிரதான பிரதேசங்களைக் கம்யூனிஸ்ட் புரட்சிப் படைகள் தம்வசமாக்கியதைத் தொடர்ந்து அங்கு இப்பொழுது உள்நாட்டு யுத்தம் ஆரம்பித்திருக்கிறது. அரசாங்க துருப்புகளுக்கும் கம்யூனிஸ்ட் புரட்சிப்படைகளுக்குமிடையே கடுமையானசண்டை நடைபெற்று வருவதாக இங்கிருந்து வெளியான செய்திகள் கூறுகின்றன.

மத்திய ஜாவாவில் கம்யூனிஸ்ட் புரட்சிப்படைகளின் கை வெகுவாக ஓங்கி வருகிறதென்றும் போதுமான ஆதரவை அவர்கள் பெற்று வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் இந்தோனேஷிய அரசாங்க துருப்புகள் முப்பது கம்யூனிஸ்டுகளை நேற்றுக் கைது செய்தனர்.

**உண்டுங் அறிக்கை**

இந்தோனேஷியாவில் திடீர் புரட்சிக்குத் தலைமை வகித்த லெப்டினட் கேர்ணல் உண்டுங் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தை அமைப்பதே தங்களின் கிளர்ச்சியின் நோக்கமாகவிருந்தது என்று தெரிவித்திருப்பதாக மலேசிய வானொலி நேற்றிரவு அறிவித்தது.

**சுபந்திரியோ**

டாக்டர் சுபந்திரியோவுக்கு எதிரான நடவடிக்கைகள் இப்பொழுது எடுக்கப்பட்டு வருவதாக வேறு சில ஏஜன்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன. டாக்டர் சுபந்திரியோவை மந்திரிசபையிலிருந்து விலக்குமாறு சில உள்ளூர் ஸ்தாபனங்கள் புரட்சிசபையைக் கோரியுள்ளன.

## இரு பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர்

அஜார்திலா, நவ. 1

திரிபுராவுக்குள் நுழைந்த கிழக்குப் பாகிஸ்தானியர் துப்பாக்கிப் படையினர்மீது இந்திய எல்லைப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இரு பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர். பாகிஸ்தானியர் சடலங்களை விட்டு ஓடிவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

—பி. டி. ஐ.

## சென்னையில் ஆர்ப்பாட்டம்

சென்னை, நவ. 1

இன்று 200 வலதுசாரி கம்யூனிஸ்டுகள் பிரிட்டிஷ் அமெரிக்க தகவல் நிலையங்கள் முன் ஆர்ப்பாட்டக்கூட்டம் நடத்தினர்கள். சென்ற திங்கட்கிழமை பூட்டோ பாதுகாப்பு சபையில் பாடிய வசைமாரிக்கெதிராக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## போர்நிறுத்தம் மீறல்

புதுடில்லி, நவ. 1

காஷ்மீரில் கடந்த 48 மணிநேரத்திலும் பாகிஸ்தான் துருப்புகள் 11 தடவைகள் போர்நிறுத்தத்தை மீறியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

லாகூர், சியால்கோட் அரங்குகளில் தங்களது நிலைகளைச் சீர்படுத்திக்கொள்வதில் பாகிஸ்தான் துருப்புகள் ஈடுபட்டுவருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

சியால்கோட் அரங்கில் பாகிஸ்தான் துருப்புகள் 4 தடவைகள் போர்நிறுத்தத்தை மீறின.

## காஸ்ட்ரோ

பிருக், நவ. 1

கியூபா பிரதமர் பிடல் காஸ்ட்ரோவின் சகோதரர் ரேல் காஸ்ட்ரோ சோவியத் யூனியனில் உத்தியோக பூர்வாமாக 3 நாள் விஜயம் செய்யும்பொருட்டு நேற்று இங்கிருந்து புறப்பட்டார். (பி. டி. ஸி.)

## ரேயல் கமிஷன்

ஸாலிஸ்பரி, நவ. 1

ரொடீஷியாவுக்கு சுதந்திரம் வழங்குவது சம்பந்தமாக ஆராயும் பொருட்டு நியமிக்கப்பட்டுள்ள ரேயல் கமிஷனுக்கு பிரதம நீதியரசர் சர்.ஹியுபீடில் தலைமை வகிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (பி.டி.ஸி.)

டோக்கியோ, நவ. 1

ஜப்பானின் புதிய கடுகதி ரயில் இன்று ஓடவிடப்பட்டது. இந்தகடுகதி ரயிலின் வேகம் மணிக்கு 140 மைல் (220கிலோமீட்டர்) ஆகும். (பி.டி.ஸி.)

வடக்கு வியட்னாமின் அறிவிப்பு குறித்து அமெரிக்கா உடனடியாக எதுவும் தகவல் வெளியிடவில்லை.

## "இரு முனைத்தாக்குதலையும் தீரத்துடன் சமாளிப்போம்

### ஊடுருவல்காரர்களை பாக். வாபஸ்பெற வேண்டும்"—சாஸ்திரி

கல்கத்தா, நவ. 1

ஜம்மு—காஷ்மீர், இந்தியாவுடன் இணைந்த பகுதி என்ற இந்தியாவின் ஆதார நிலையில் சிறிதும் மாறுதல் கிடையாது. மாற்றவும் முடியாது என்று ஐக்கிய நாடுகள் பந்தோபஸ்து சபைக்கு இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி மீண்டும் தெரிவித்துள்ளார்.

கல்கத்தாவில்நேற்றுமாலை நடைபெற்ற பிரமாண்டமான பொதுக்கூட்டமொன்றில் உரைநிகழ்த்துகையில்தான் பிரதமர் சாஸ்திரி இந்தியாவின் கொள்கையை வற்புறுத்திக் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; ஜம்மு—காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி என்ற நிலையிலிருந்து இந்தியா ஒருபொழுதும் இம்மியும் விலகமுடியாது என்ற எமது கொள்கையை ஐ. நா. பந்தோபஸ்து சபை உறுப்பினர்கள் உணரவேண்டும் என்றும் கூறினர்.

ஜம்மு—காஷ்மீரில் ஊடுருவல்பற்றி சாஸ்திரி குறிப்பிடுகையில்; அங்குள்ள சகல ஊடுருவல் காரர்களையும் பாகிஸ்தான் விலக்கிக்கொள்ளாவிடில் இந்தியா அவர்களை விரட்டியடிக்கும் என்று தெரிவித்தார்.

"காஷ்மீரில் புதியதொரு தாக்குதலை நடத்த பாகிஸ்தான் திட்டமிட்டு வருகிறது. அந்தச் சவாலை நாங்கள் நிச்சயம் முறியடிபோம், பாகிஸ்தான் சீனவுடன் கூட்டுச் சேர்ந்து எம்மீது இருமுனைத் தாக்குதல் தொடுத்தாலும் அதனை வெற்றியுடன் சமாளிக்கும் திறன் இப்பொழுது எமக்கு உண்டு" என்றும் பிரதமர் சாஸ்திரி உறுதியுடன் எச்சரிக்கை செய்தார்.

# சிங்கப்பூரிலும் சீன எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

### சீன பல்கலைக்கழக மொன்று கொளுத்தப்பட்டது

சிங்கப்பூர், நவ. 1

சிங்கப்பூரில் நேற்று சுமார் 300 இடதுசாரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி சீனப் பல்கலைக்கழகமொன்றுக்குத் தீவைத்து கொளுத்தினர்.

மாணவர்கள் ஊர்வலமாக வந்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். சீன பல்கலைக்கழகமொன்றுக்கு அவர்கள் தீயிட்டபொழுது ஆயுதம் தரித்த பொலிஸார் அழைக்கப்பட்டனர்.

பொலிஸாரின் கோரிக்கையையும்அவர்கள் மீறவே பின்னர் பொலிஸார் கண்ணீர்ப்பிரயோகம் செய்தனர்.

# அல்ஜியர்ஸ் மகாநாடு: இன்று முடிவு தெரியும்

அல்ஜியர்ஸ், நவ. 1

ஆசிய - ஆபிரிக்க மகாநாடு இம்மாதம் 5-ம் திகதி வெள்ளிக்கிழமை இங்கு நடைபெறுமா இல்லையா என்பது நாளை செவ்வாய் கிழமை உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படும்.

ஆயத்தக் கமிட்டியினர் கடந்த சனிக்கிழமை மீண்டும் கூடி இதுபற்றி ஆலோசனை நடத்தி வந்தனர். மகாநாடு நடைபெறுவதை இந்தியா உள்ளிட்டு பல நாடுகள் விரும்பியபொழுதிலும் மகாநாடு ஒத்திவைக்கப்படுவதை சீனு, பாகிஸ்தான் உள்ளிட்டு சில நாடுகள் விரும்பி வந்தன. மூன்று மாதத்துக்கு மகாநாட்டை ஒத்திவைக்குமாறு சீனு கோரியிருந்தது.

இந்தச் செந்தி அச்சுக்குப் போகும்வரை ஆயத்தக் கமிட்டியின் முடிவு அறிவிக்கப்படாத போதிலும், மகாநாடு சில மாதகாலத்துக்கு ஒத்திவைப்பதையே அலஜீரியா உள்ளிட்டு பல நாடுகள் விரும்பியதாகவும் ஆயத்தக் கமிட்டியினடும் இதனை ஏற்றுக் கொண்டதாகவும் ஏஜன்ஸி செய்திகள் கூறுகின்றன.

## சர்தார் பட்டேல்

புதுடில்லி, நவ. 1

சர்தார் பட்டேலின் பிறந்த நாள் நேற்று இந்தியாவின் பல பகுதிகளிலும் கொண்டாடப் பட்டது. செங்கோட்டை மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ராஷ்டிரபதி டாக்டர் ராதகிருஷ்ணன், பாதுகாப்பு மந்திரி சவான், ராஜாஜி உட்பட பலர் உரைநிகழ்த்தினர்.

## மிக்கோயன் அழைப்பு

மாஸ்கோ, நவ. 1

பிரெஞ்சு அதிபர் டிகோலுக்கு சோவியத் அதிபர் மிக்கோயன் ரஷ்யா வரும்படி அழைப்பு விடுத்துள்ளார்.

## கடத்தல்

ஸியோல், நவ. 1

கடந்த வெள்ளிக்கிழமை 100 தென் கொரிய ஆண்களையும் பெண்களையும் குழந்தைகளையும் வடகொரிய துருப்புகள் கடத்திச் சென்றதாகக் கிடைத்த தகவல்களை தென் கொரிய அதிகாரிகள் இப்பொழுது ஆராய்ந்து வருகின்றனர்.

தீவொன்றில் இவர்கள் உல்லாசமாக இருந்த பொழுது 20 வட கொரிய துருப்புகள் துப்பாக்கி முனையில் இவர்களைக் கடத்திச்சென்றதாகக் கூறப்படுகிறது.

பி. டி. ஸி.

## 'மனம் குன்றினல் கல்விநிலை குன்றும்'

யாழ்ப்பாணம், செவ்.

"ஆசிரியன் வருங்காலச் சந்ததியை வளர்ப்பவன். இங்கிலாந்து முதலிய வளர்ச்சியடைந்த தேசங்களில் ஆசிரியர்களை இடத்துக்கிடம் நேரத்துக்கு நேரம் மாற்றுவதேயில்லை. நமது நாட்டில் கல்வித் தொண்டே மேலான தொண்டென்று கருதிவந்த ஆசிரியர்கள் மனம் நோகக் கூடியவிதமாகச் சமீபகால நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. ஆசிரியன் மனம் குன்றினல் கல்வியின்நிலை பெரிதும் குன்றும்" இவ்வாறு சென்ற வெள்ளிக்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற வலி. கிழக்குத் தமிழாசிரியர் சங்க நிர்வாக சபைக்கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு. பொன்னுத்துரை பேசுகையில் குறிப்பிட்டார். சங்கத் தலைவர் திரு. க. இ. குமாரசாமி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

வட இலங்கைத் தமிழாசிரியர் சங்க நிர்வாகசபை

(4-ம் பக்கம் பார்க்க

# புரட்சி இயக்கங்களை ஆதரிக்குக

### வெளிநாட்டு கம்யூனிஸ்டுகளுக்கு சீனமக்கள் குடியரசு தலைவர் கோரிக்கை

பீகிங், நவ. 1

கம்யூனிஸட் சீனவை மிகவும் வல்லமை பொருந்திய நாடாக மாற்றுவதில் அயராது உழைக்கும்படி வெளிநாடுகளிலுள்ள கம்யூனிஸ்டுகளை சீன மக்கள் குடியரசுத் தலைவர் கோரியுள்ளார்.

இதற்கு ஒரேவழி புரட்சி இயக்கங்களை ஆதரிப்பதே என்றும் அவர் விளக்கம் கொடுத்துள்ளார்.

சின மக்கள் குடியசுத்தலைவர் திரு. லீஷாஒஷி நேற்றிரவு பீகிங்கில் நடைபெற்ற வைபவமொன்றில் உரை நிகழ்த்துகையில்தான் மேற்கண்டகோரிக்கையை வெளியிட்டார்,

'வெளிநாடுகளிலுள்ள கம்யூனிஸ்டுகள் அந்த நாடுகளிலுள்ள புரட்சி இயக்கங்களுக்கு போதுமான ஆதரவு கொடுக்க வேண்டும். ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளில் புரட்சி இயக்கங்களுக்கு நல்ல வெற்றி கிடைத்து வருகிறது. வல்லமை மிக்க ஒரு சீனவை உருவாக்கப்புரட்சிதான் மிகமுக்கியம்' என்றும் அவர் தெரிவித்தார்.

ஏகாதிபத்திய வாதிகளை ஒழிக்கவேண்டும் மென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

# 15 அமெரிக்க விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன

ஹனோய், நவ. 1

வடக்கு வியட்னாமிலுள்ள சிலபகுதிகளில்நேற்றுகுண்டு மாரிபொழிந்த பதினைந்து அமெரிக்க விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக ஹனோய் வானொலி அறிவித்துள்ளது.

வேறு சில விமானங்கள் சேதப்படுத்தப் பட்டதாகவும் இந்தவானொலி அறிவித்தது.

அமெரிக்க விமானங்கள் நேற்று வடக்கு வியட்னாமிலுள்ள பல பகுதிகளில் குண்டுகள் வீசி இராணுவ நிலைகளையும், கிடங்குகளையும், பாலங்களையும் சேதப்படுத்தியதாக சைகோன் செய்திகள் கூறுகின்றன.

# "மீண்டும் வேலைகேட்பதை விட நஷ்டஈடு கேட்பதே நல்லது"

## மொழிப்பிரச்னையில் ஒய்வுபெற்ற ஊழியருக்கு நல்லூர் எம். பி. யோசனை

யாழ்ப்பாணம், செவ். 'சிங்களச் சட்டத்தின்கீழ் ஓய்வுபெற்ற அரசாங்கஊழியர்கள், திரும்பவும் வேலை பெற முயற்சிப்பதைக் கைவிட்டு நஷ்டஈடு கோருவதே சிறந்ததென நான் கருதுகிறேன். இக்கோரிக்கைக்கு சிங்கள சட்டத்தால் பாதிக்கப்பட்ட சிங்களஊழியர்களும் முழு ஒத்துழைப்பையும் கொடுப்பார்களாதலால், இக்கோரிக்கை வெற்றிபெறும்'.

வண்ணை வைத்தீஸ்வரவித்தியாலய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற, சிங்களச் சட்டத்தின்கீழ் ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர்களின் கூட்டத்தில் நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். நாகநாதன் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. பி.சி, பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் டாக்டர் நாகநாதன் மேலும் கூறியதாவது:—

''சிங்களச் சட்டத்தால் ஓய்வுபெற்ற சிங்கள ஊழியர்கள் திரும்பவும் வேலை பெற முயற்சிக்காது நஷ்டஈடு கோரிக்கையே வலியுறுத்துவார்களென நான் கருதுகிறேன். அரசாங்க அலுவல்கள் சிங்களத்தில் நடைபெறுவதையே சிங்கள மக்கள் விரும்புவார்கள். சிங்களத்தில் பணியாற்ற முடியாதென வெளியேறிய சிங்கள ஊழியர்களுக்கு இந்த நிலையில் திரும்பவும் வேலைகொடுக்க சிங்கள எம். பி.க்கள் முயற்சிஎடுக்கமாட்டார்கள். தமிழ் அரசாங்க ஊழியர்களைப்போலல்லாது, சிங்கள ஊழியர்கள் தங்கள் சொந்த விருப்பத்திலேயே வெளியேறினர்கள். ஆதலால் அவர்கள் நஷ்டஈடு கோரிக்கையையே ஆதரிப்பார்கள்.''

வட்டுக்கோட்டை எம்.பி, திரு. ஏ. அமிர்தலிங்கம் கூறியதாவது:—

சிங்களச் சட்டத்தால் வேலையிழந்த அரசாங்கஊழியர்களைப்பற்றி நாங்கள் பல தடவை அரசாங்கத்திடம் பேசியுள்ளோம்.

### உபகுழுவின் சிபார்சு

மந்திரிசபையின் உபகுழு முதலில் இளைப்பாறியவர்களின் விஷயம்பற்றி புனராலோசனை செய்து திரும்பிவர சந்தர்ப்பமளிக்க வேண்டும் என்றும் முடியாதவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்றும் சிபார்சு செய்தது. இதற்கு மந்திரிசபையில் பல எதிர்ப்புக்கள் கிழம்பின. இதன்காரணமாகவே உபகமிட்டியின்சிபார்சுகள் செயல்பட முடியாமற் போய்விட்டது.

இந்த சிபார்சு திறைசேரியின் ஆலோசனைக்காக அனுப்பிவைக்கப்பட்டது. திறைசேரி இந்த சிபார்சை ஏற்றுக்கொள்ளவில்லை. சிங்களச்சட்டத்தால் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் 4000 பேர் இருக்கிருர்கள். இவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்தால் அரசாங்க நிர்வாக இயந்திரம் சீரழிந்துவிடுமென்றும், இந்தக் காலி இடங்களுக்கு ஆட்கள் ஏற்கனவே எடுக்கப்பட்டுவிட்டார்களென்றும், திறைசேரி தெரிவித்தது.

அதுமட்டுமன்றி வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்ப்பதாகக் கூறிவிட்டு, வேலையிழந்தவர்களுக்கு மீண்டும் வேலை கொடுப்பதால், பிரச்னைகள் அதிகரிக்கும் என்றும், சிங்களத்தில் வேலைசெய்ய முடியாதென வெளியேறியவர்களை மீண்டும் வேலைக்கமர்த்திஞல் எதிர்க் கட்சிகளின் பிரசாரத்திற்கு இடம்கொடுத்ததாகுமென்றும், அமைச்சர்கள்கருதினர்கள். திறைசேரியின் ஆலோசனை காரணமாக இவ்விஷயம் பல தடவை பின்போடப்பட்டது.

இளைப்பாறியவர்கள் பற்றியும், புதிய ஊழியர்கள் பற்றியும், 55 வயதிற்கு மேற்பட்ட ஊழியர்கள் பற்றியும், பிரதமருடனும், ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடனும்பலதடவை பேச்சுக்கள்நடத்திஞேம். ஆனுலும் ஒரு முடிவிற்கு வரவில்லை.

### பிரதமருக்குக் கடிதம்

திரு. செல்வநாயகம் அண்மையில் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்திலும் மேற்கூறியவைபற்றி வலியுறுத்தியுள்ளார். மந்திரிசபை முடிவும் திறைசேரி முடிவும் வராத காரணத்திஞலேயே இவ்விஷயம் நீண்டுகொண்டு போகிறது. மந்திரி சபை முடிவை திறைசேரி மிகவும் இறுக்கமாக செயல்படுத்துகிறது.

இதுவரை நாங்கள் நஷ்டஈடு கோரிக்கையைஎடுத்துக் கூறவில்லை, வேலையிழந்தவர்களுக்கு மீண்டும் வேலை வழங்குவது முடியாது போனுலே, நஷ்டஈடுபற்றிப் பேச முடிவு செய்துள்ளோம். இங்குள்ள பலர் திரும்பவும் வேலைபெற விரும்புவதாலேயே நஷ்டஈடுபற்றி நாங்கள் இன்னும் பேசவில்லை. இதனுல்தான் பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலும் நஷ்டஈடுபற்றிக் கூருமல்விடப்பட்டது.

### பெரும்பாலார் சிங்கள ஊழியர்கள்

சிங்களச் சட்டத்தால், பாதிக்கப்பட்ட 4000 ஊழியர்களில் பெடும்பாலோர் சிங்கள ஊழியர்களாவர். இது ஒரு இனப்பிரச்னையாகவோ, தமிழர்களின் பிரச்னையாகவோ இருக்கவில்லை. சிங்கள ஊழியர்களில் பலர் திரும்ப வேலைபெற விரும்பமாட்டார்கள் 60 சத வீதமானேர் சிங்கள ஊழியர்களாக இருப்பதால் இது எங்கள் பிரச்னையாக மட்டும் கருதலாகாது.

இளைப்பாறியவர்கள்பற்றி அவர்கள் இளைப்பாறியது சரியா பிழையா என்ற ஆராய்ச்சியில் இறங்காமல் பரிகாரம் தேட வேண்டும். எவ்வளவு கூடிய அளவு பேருக்கு திரும்ப வேலைபெற முடியுமோ, அவற்றைப் பெற்று மிகுதி ஊழியர்களுக்கு நிவாரணமோ வேறு வேலையோ தேட முயற்சிக்க

REGAL—JAFFNA
NOW SHOWING!
Rare Sights o; the World !!
MANDO CANE
(Technicolor) (Adults Only)

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ராஜ் (நீர்கொழும்பு
தீவொளி (நுவரேலியா) ராஜா (யாழ்ப்பாணம்) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2, 6, 9-30 மணிக்கு

தென்னுட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!

'நான் ஆணையிட்டால்—அது நடந்துவிட்டால்—இங்கு ஏழைகள் வேதனைப் படமாட்டார்''

எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்ன, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த



விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
(ஈஸ்ட்மென் கலர்)

# கடனுதவித் திட்டமூலம் மீனவருக்கு உதவி

## மாதகல் கூட்டத்தில் மந்திரி பிலிப் அறிவிப்பு

— நமது நிருபர் பாலா —

யாழ்ப்பாணம், திங்கள் பிடிக்கும் மீனுக்கு நியாயவிலை கிடைக்கச் செய்யவும், அவைகளை பழுதடையாமல் சேமித்து வைப்பதற்கான முறையில் குளிர்சாதன வசதியையும், பழுதடையும் யந்திரப்படகுகளை உடனுக்குடன் பழுதுபார்க்கும் தொழிற்சாலை ஒன்றையும் அமைத்து மீன்பிடித் தொழிலாளர் கிளை எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு நிவர்த்தி காணுவதற்கான திட்டங்களை அமுல்நடத்த உத்தேசித்துள்ளதாகவும் தம்முடன் வந்திருக்கும் மீன்பிடிப் பிரிவு அதிகாரிகள் குறைகள் பற்றிஆராய்ந்து ஆவன செய்வார்களெனவும் மாதகலில் தமக்களித்த வரவேற்பு உபசாரத்தில் பேசிய

வேண்டும்.

தமிழ்மொழிச் சட்டம்பற்றியும், மாவட்டசபைகள் பற்றியுமே, நாங்கள் அதிக கவனம் செலுத்தி வருகிஞேம். இவற்றை நிறைவேற்றிவிட்டால் உங்கள் பிரச்னைகளைத் தீர்ப்பது எளிதாகிவிடும். நீங்கள் கூறும் ஆலோசனைகளைப் பரிசிலனை செய்வோம்.

கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப் பிள்ளை கூறியதாவது:

சிங்களச் சட்டத்தால் வேலையிழந்த சிங்கள ஊழியர் விஷயமாக இதுவரை எந்த சிங்கள எம். பி.யோ மந்திரியோ பேசியதாக எனக்குத் தெரியவில்லை. பாராளுமன்றக் குழுக் கூட்டத்திலும்சரி மந்திரிசபையிலும்சரி எவரும் கூறவில்லை. இவ்விஷயமாக சிங்கள ஊழியர்களும் முயற்சி எடுத்து வருவதாக இங்கு கூறப்பட்டது. இதையிட்டு எனக்கு மகிழ்ச்சி. சிங்கள எம். பி.க்களையும், மந்திரிகளையும்இவ் விஷயமாக சிங்கள ஊழியர்கள் முயற்சி எடுக்க முயல வேண்டும்.

பெருந்தொகையான தமிழ் அரசாங்க ஊழியர்கள் சமுகமளித்திருந்த இக் கூட்டத்தில் புதிதாகப்பலர் அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொண்டனர். அங்கத்தவர்கள் பலர் தங்கள்கருத்துக்களைத் தெரிவித்தனர்.

திரு. இரத்தினசபாபதி, திரு. இளையதம்பி மற்றும் பலர் பேசினர்.

கைத்தொழில் மீன்பிடிமந்திரிதிரு. பிலிப்குணவர்த்தன பேசுகையில் கூறினர்.

மாதகல் கடற்கரைத் துறையில் அழகாக அமைக்கப்பட்ட பந்தலில் மந்திரிக்கு வரவேற்பு உபசாரமளிக்கப்பட்டது. மந்திரியையும், திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. அமிர்தலிங்கம், செனட்டர் நடராசா உட்பட எல்லோரையும் ஊர்வலமாக அழைத்துச்சென்றனர்.

மீன்பிடித் தொழிலாளர்களுடைய குறைகளை விளக்கும் மகஜர் ஒன்று வாசித்தளிக்கப்பட்டது. கூட்டத்துக்கு திரு செல்வநாயகம் தலைமைதாங்கிஞர்.

மந்திரி திரு. குணவர்த்தன தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

மீன்பிடித் தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டும். பிடிக்கும் மீனை ஒரு மத்திய நிலையத்தில் சேமித்து வைப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்துதருவதற்கு உத்தேசித்துள்ளேன்.

உங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு தேசிய அரசாங்கம் எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும். கட்டாயம் எடுத்தேயாகவேண்டும். ஏனென்ருல் சரித்திரத்தில் முதன்முறையாக எல்லாச் சமூகத்தினரும் ஒன்ருகச் சேர்ந்துள்ளோம். இப்படியான ஒடுமைப்பாட்டுடன் ஒரே நோக்கத்துக்காக ஒன்றுசேர்ந்த நாம் மக்களுடைய பிரச்னைகளை தீர்த்துவைப்போம்.

### வெறும் வாக்குறுதிகள் அளிக்கப்படவில்லை

உங்களுடைய பிரச்னைகளைஇப்போது செய்வோம்,

(6-ம் பக்கம் பார்க்க)

# மனம் குன்றினல் ....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களாகத் திருவாளர்கள் க.இ.குமாரசுவாமி, அ. பஞ்சாட்சரம், இ. துரைசிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். ஆசிரியர் பிரச்னைகளையிட்டு வெகு சமீபத்தில் வலி. கிழக்குத் தமிழாசிரியர் சங்கத்தின் விசேஷ பொதுக்கூட்டத்தை நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இரவில் இன்னல் நேராமல்
பாதுகாத்துக் கொள்ளுங்கள்



இன்று கிடைக்கக் கூடிய சிறந்த டார்ச் பாட்டரி
லக்சபான



# பின்னணி வீரர் கிறிஸ்ரியனின் சிறப்பான விளையாட்டு

யாழ்ப்பாணம், செவ்.

உதைபந்தாட்டத்தைப் பொறுத்த மட்டில் யாழ்ப்பாணத்தில் இவ்வருடம் 'பெரிய போட்டி' என்ருல் அது யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் — சென். பற்றிக்ஸ் மோதல்தான். உதைபந்தாட்ட ரசிகர்கள், ஆவலோடு எதிர்பார்த்திடுப்பதும் இந்தப் போட்டியைத்தான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த வெள்ளிக் கிழமை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஒரே ரசிகர் கூட்டம். மைதானத்தைச் சுற்றியுள்ள மதில்களிலும் உயர்ந்த மரங்களிலும் ரசிகர்கள் தொங்கிக் கொண்டார்கள். பல நூற்றுக் கணக்கில் ரசிகர்கள் இங்கு குழுமியிருந்தது, போட்டியில் கலந்து கொண்ட வீரர்களுக்கு தனி உற்சாகத்தை அளித்திருந்தது.

முன்னர் நடைபெற்ற போட்டிகளில் எதிர் கல்லூரிகளை அதி.. புள்ளிகளால் வெற்றிகொண்ட இவ்விரு கல்லூரிகளும் வெள்ளியன்று மோதியதில் சென் பற்றிக்ஸ் இரு பிரிவுகளிலும் வெற்றி பெற்றது.

முதலில் 'பி' பிரிவுப் போட்டி ஆரம்பமாகியது. போட்டி தொடங்கி 15 நிமிடங்கள் வரை, விறுவிறுப்பு குறையாமல் இருந்தது இடைவேளைக்கு பத்து நிமிடங்களுக்கு முன்னர் சென். பற்றிக்ஸின் மத்திய பின்னணி வீரர் பிரான்சிஸ் ஒரு கோலை வெகுலாவகமாகப் போட்டார். இதனைத்தொடர்ந்து 'மோதல்' உக்கிரமானது! சென். ஜோன்ஸ் முன்னணி பின்னணி வீரர்கள் மிக வேகமாக விளையாடி வலது பின்னணி வீரர் மகாலிங்கமும் வலது முன்னணி வீரர் விஜயக்குமாரும் அடுத்தடுத்து ஒவ்வொரு கோலைப் போட்டுத் தள்ளினர்.

இடைவேளையின் பின் போட்டி உச்சக் கட்டத்தை அடைந்தது. ஆட்டம் முடிவடைவதற்கு எட்டு நிமிடங்களுக்கு முன்னர், சென். பற்றிக்ஸ் மத்திய பின்னணி வீரர் ராசையா, இடது முன்னணி வீரர் போணிபஸ் ஆகிய இருவரும் அடுத்தடுத்து வெகு அழகாக கோல்களை போட்டார்கள் போட்டி முடிவில் சென். பற்றிக்ஸ் (3—2) வென்றது. இப்போட்டிக்கு திரு. யத்துரகுலசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

## 'ஏ' பிரிவு போட்டி

'ஏ' பிரிவுப் போட்டி ஆரம்பமாகியதும் விண்ணே அதிரத் தொடங்கி விட்டது. ரசிகர்களின் ஆரவாரம் உச்சக் கட்டத்தை அடைந்து விட்டது.

இரு கல்லூரிகளின் முன்னணி வீரர்களும் பந்தை எதிர்க் கோஷ்டியினர் கோல்காப்பு வாயிலைநோக்கி கொண்டு செல்லும் போது அக்கல்லூரிகளின் மாணவர்கள் - ரசிகர்கள் போட்ட சத்தம் - அந்தக் கரகோஷம் காதையே ஒரு முறை பிளந்து விட்டது!

போட்டியின் ஆரம்பத்திலேயே பந்து, சென். ஜோன்ஸ் கோல்காப்பு வாயிலை வட்டமிட்டுக் கொண்டிருந்தது — சகுனம் தப்பாது என்பதற்கு சான்ருகி விட்டது! ஒரு கட்டத்தில், சென். பற்றிக்ஸ் மத்திய முன்னணி வீரர் சந்தியாக்கோ அடித்த பந்தை, சென். ஜோன்ஸ் பின்னணி வீரர் தலையால் தடுத்த போது தலையும் தப்பவில்லை பந்தும் போக மறுக்கவில்லை! பந்து கோலுக்குள் ஒடி ஒழிந்து கொண்டதே போதும். அப்பப்பா ... போட்டியின் வேகம் அதிகரித்து மோதலும் மும்முரமாகிவிட்டது.

ரசிகர்களின் ஆரவாரம் வீரர்களுக்கு தனி உற்சாகத்தை அளித்தது. ஆனுல் சென். ஜோன்ஸ் முன்னணி வீரர்கள் கோல் போடுவதற்கு எடுத்த முயற்சிகள் ஏன் வீணுனது என்பது ஒரு புரியாத புதிர். இதை புரியவைத்தவர் சென். பற்றிக்ஸ் பின்னணி வீரர் கிறிஸ்ரியன் எதிர் முன்னேற்றங்களையெல்லாம் அவர் தடுத்துக் கொண்டே இருந்தார். சென். பற்றிக்ஸ் வெற்றிக்கு இவரே காரணம் என்பது மறைக்க முடியாத உண்மை.

இடைவேளைக்கு முன் சென். பற்றிக்ஸ் 2 கோல்கள் போட்டிருந்தது. சென். ஜோன்ஸ் எதுவும் போடவில்லை. இடைவேளையின் பின்னர் சென் ஜோன்ஸ் முன்னணி வீரர்கள் கொடுத்த ''தொல்லை''களை பற்றிக்ஸ் கோல்காப்பு வீரர் கிறவுதர் 'அன்புடன்' சமாளித்து விட்டார்.

ஆட்டம் முடிய ஏழு நிமிடங்கள் இருந்தது. பற்றிக்ஸ் முன்னணி வீரர்கள் யேக்கப்பும் வெற்றிவேலும் சாதுரியமாக விளையாடி மளமளவென இரண்டு கோல்களை உள்ளே தள்ளிவிட்டனர்! சென். ஜோன்ஸ் தோற்ருலும் காப்டன் பாலாவின் விளையாட்டு பாராட்டத்தக்கது. முடிவு பற்றிக்ஸ் (4—0) வென்றது. திரு. ஸ்ரீநிவாசஐயர் மத்தியஸ்தம் வகித்தார்.

—"அவதானி"




## கொழும்பு

**செவ்வாய் 2-11-65**

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 படப்பாட்டுக்கள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 நிலைய ஒலிப்பதிவுகள். 7-00 வயலின், 7-30 பஞ்சபணம்,

# 5 வருட கடுழியம்

## வவனிக்குளம் கொலை வழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், செவ்.

வவனிக்குளம் கொலைவழக்கில் எதிரிக்கு ஐந்து வருட கடுழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. எதிரி கைமோசக் கொலைக் குற்றத்தில் குற்றவாளியென ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து நீதியரசர் தீர்ப்பு வழங்கினுர்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நேற்றுக் காலை நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யு. தம்பையா கியூ. சி. முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது

64-ம் ஆண்டு நவம்பர் 3-ம் திகதி வவுனிக் குளத்தில் கண்ணுத்தையை, வேலுப்பிள்ளை கோவிந்தபிள்ளை கொலை செய்ததாக இவ் வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் அட்வகேட் திரு. ரி. கணேசலிங்கம், திரு. பி. ரி. ஜி. பிரிட்டோவின் அனுசரணையுடன் ஆஜராஞர். எதிரிக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் திரு. எம். ஆலால சுந்தரம் நியமிக்கப்பட்டிருந்தார்.

வட பகுதி அசைஸ் நீதிமன்ற விசாரணைகள் நேற்றுடன் முடிவடைந்தன.

# ஐயா றன்

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

நமது எதிர்காலத் தலைவர்களைச் சிருஷ்டிக்கும் பேராதனை சர்வகலாசாலையிலே நடந்துள்ள ஒரு சம்பவத்தைக் கேட்டுப் பலரும் திடுக்கிடுவர். அங்கு புதிதாகச் சேர்ந்துள்ள மாணவர்களை மிகக் கேவலமாக ''ராகிங்'' செய்ததற்காக 6 மூத்த மாணவர்களை விடுதியிலிருந்து வெளியேற்றியுள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது.

எப்படி ''ராஸிங்'' செய்தனர் தெரியுமா? எழுதுவதற்கே என் கை கூசுகின்றது. சாராயத்துடனே.... யும் கலந்து புதிய மாணவரைக் கட்டாயப்படுத்திக் குடிக்கச் செய்தனராம்! வெட்கம்! வெட்கம்!! பெரும் செலவுசெய்து தங்கள் அருமைப் பிள்ளைகளை பேராதனைக்கு மேல்படிப்பு படிக்க அனுப்பிவைக்கும் பெற்ருேரின் மனம் இதைக் கேட்டு என்ன பாடுபடும்!

அம்மாணவரிடையே மதுபானப் பழக்கம் அதிகரித்துள்ளதாக ஏற்கனவே இப்பத்திகளில் குறிப்பிட்டிருந்தேன். அங்கு கல்வி போதனைசெய்யும் பேராசிரியர்களில் சிலரே குடிப்பழக்கமுள்ளவர்கள் என்றும், அவர்களைப் பார்த்தே பல மாணவர்களுக்கும் இப்பழக்கம் ஏற்படுவதாகவும் தெரிகிறது.

மாணவர்களுக்கு மேலான நல்வழி காட்டவேண்டியது பேராசிரியர்களின் கடமை. அவர்களே கூடாத பழக்கமுள்ளவராயின், மாணவர்கள் வேறு எப்படியிருப்பர்? இதற்குத்தாஞு நாம் நமது அருமைப் பிள்ளைகளைப் பேராதனைக்குப் பெரும் செலவில் அனுப்பிவைப்பது? சர்வகலாசாலை உபவேந்தரே! பேராசிரியர்களே நீங்களேபதில் சொல்லுங்கள்!

ஃ ஃ ஃ

ஒருபிறப்பிலா னடியை உணர்ந்துங் காணுர் உயர்கதிக்கு வழிதேடிப் போக மாட்டார், வருபிறப்பொன் றுணராது மாசுபூசி வழி காணுதவர் போல்வார் மனத்தனுகி, அறுபிறப்பை யறுப்பிக்கும் அதிகை யூரான் அம்மான்தன் அடியிணையே அணைந்துவாழா, திருபிறப்பும் வெறுவியராயிருந்தார் சொற்கேட் டேழையேஞன் பண்டிகழ்ந் தவாரே.

—அப்பர் சுவாமிகள்


# வரி விளம்பரம்

## திருமண அழைப்பு

திரு. திருமதி. கந்தவனத்தின் (அளவெட்டி வடக்கு) புத்திரன் திரு. நித்தியானந்தனுக்கும் திரு. திருமதி. சின்னத்தம்பியின் (வட்டுகிழக்கு, சித்தங்கேணி) புத்திரி செல்வி கிரியாசக்தி அவர்களுக்கும் மணமகளில்லத்தில் 3-11-65காலை11-02 தொடக்கம் 12-00 மணி வரையிலுள்ள சுபமுகூர்த்தத்தில் திருமணம் நடைபெற இருப்பதால் உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன்அழைக்கின்ருேம். 1325

## தேவை

50 தொழிலாளர் அக்கராயனில், ஸ்கந்தபுரத்தில் வாய்க்கால் வெட்டத் தேவை. நாள் சம்பளம் அல்லது குழிக்கணக்கு. எல்லா வசதிகளும் உண்டு. புதன்கிழமை ஸ்தலத்தில் ஆள் திரட்டப்படும். விவேகானந்தன், இளைப்பாறிய என்ஜினியர். 1316

கைத்தறியில் தேர்ச்சி பெற்ற பெண்களும், தேர்ச்சி பெறவிரும்பும் பெண்களும் கடிதமூலம் விண்ணப்பிக்கவும். ''சோபனு'' இன்டஸ்றீஸ், 12 மணிக்கூடு வீதி, யாழ்ப்பாணம். 1200

## வைத்தியம்

**தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி** முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணுனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

புதிய ரெமிங்டன் போர்ட்டபிள் டைப்ரைட்டர் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- சித்திராலயா, படப்பிடிப்பாளர், 18, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பணம். 1321

நல்ல நிலைமையிலுள்ள ஆஸ்டின் A 90 (இல: 1 சிறீ 4317) விற்பனைக்குண்டு. வியாழக்கிழமை 4-ம் திகதி நேரில் பார்வையிடலாம். பெர்ஞண்டோ கரேஜ், தபாற்கந்தோர், கே. கே. எஸ். வீதி சந்தி, யாழ்ப்பாணம். 1323

நல்ல நிலைமையிலுள்ள EY இலக்கத் தொடர்புள்ள வக்ஸால் வைவன் (Vaxhall Wyvern) விற்பனைக்குண்டு. ஒருவரே ஏழு வருடங்கள் பாவித்தது. தென்னை ஆராய்ச்சித் தோட்டம், பளையில் பார்வையிடலாம். 1315

## பிரபல சோதிடம்

சாதகப்பலன் ரூபா 3-00, ரேகைபலன் ரூபா 2-00, ஆரூடபலன் ரூபா 1-00, S. சிவகுருநாதன், 160 அரசடி ரோட், கந்தர்மடம் யாழ்ப்பாணம். 1324


# தொழில்நுட்ப நூல்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், செவ்.

வட்டு சிவன் இந்து சமய அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளின் பெயரில் காந்திஜீ சனசமூக நிலைய கிராம முன்னேற்றச் சங்க நூல்நிலையத்துக்கு சுமார் 300 ரூபா பெறுமதியான பொறியியல், தொழில் நுட்ப நூல்கள், அமெரிக்க கல்வி நிறுவனம் வழங்கியுள்ளது, தொழில் நுட்பம், பொறியியல் மாணவர்களுக்கு உபயோகமான இந்நூல்கள் சென்றவாரம் வழங்கப்பட்டது. சங்கத் தலைவர் திரு. மயில்வாகனத்துக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் அடுத்த ஆண்டில் மேலும் பல தொழில்துறை நூல்களை தாம் வழங்க விருப்பதாக நிறுவன அதிகாரி உறுதியளித்துள்ளார்.

# மரவள்ளியும் இஞ்சியும் யமஞக வந்தன!

ஊர்காவற்றுறை, திங்.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த படுத்திடைப்பு வாசியான எஸ். கந்தையா (வயது 45) வயிற்றுக்குத்து வியாதியால் பீடிக்கப்பட்டு யாழ்ப்பாணம்பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு போகும் வழியில் மரணமாஞர்.

மரவள்ளிக்கிழங்கை உண்ட இவர் வயிற்றுக்குத்து வியாதியால் பீடிக்கப்பட்டாராம் வயிற்றுவலி தாங்காமல் இஞ்சிச் சோடா அருந்தியதாகவும் கூறப்படுகிறது. ஆபத்தான நிலையில் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு 'அம்புலன்ஸ்' மூலம் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப் பட்டபோது வழியில் மரணமாஞர் என அறியப்படுகிறது.

# தீர்ப்பு ஒத்திவைப்பு

ஊர்காவற்றுறை, திங்கள்

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த அப்பையா நாகேசு என்பவர் அமிர்தநாதர் மனைவி அலங்கிரீனு அல்லது குணம் என்பவரை வாளால் வெட்டிக் காயப்படுத்தியதாகக் குற்றம்சாட்டி ஊர்காவற்றுறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி திரு. ரி.ஜே. இராசரத்தினம் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு தீர்ப்புக் கூறுவதை நவம்பர் மாதம் நாலாந்திகதிக்கு ஒத்திவைத்தார்.

வழக்காளி தரப்பினர் வழக்கை இணங்குவதாகத் தெரிவித்த போதிலும் எதிரி உடன்படாது வழக்கறிஞர் எவருமின்றி வழக்கை நடத்தினுர்.

# சந்தையில் விழுந்து மரணம்

சாவகச்சேரி, திங்கள்

கொடிகாமச் சந்தையில் சாமான் வாங்குவதற்குச் சென்ற மந்துவில் வாசியான என். சின்னையா (வயது 65) என்பவர் சந்தைக்குள் மயங்கி விழுந்து சந்தையில் மரணமடைந்தார்.

சாவகச்சேரிப் பொலிசாரும் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். வே. திரவியநாயகம் சந்தையில் விசாரணை செய்தனர்.

டாக்டர் திரு. பி. சண்முகராசா பிரேத பரிசோதனை செய்தார். விசாரணை முடிவில் திடீர் மரணவிசாரணை அதிகாரி இயற்கை மணரமெனத் தீர்ப்பளித்தார்.

# சுருட்டுத் தொழிலாளர் சங்கம்வரவேற்பு

கோண்டாவில், திங்.

கைத்தொழில் மந்திரி திரு. பிலிப் குணவர்த்தனுவுக்கு யாழ்ப்பாணம் சுருட்டுத் தொழிலாளர் சங்க ஆதரவில் சங்கக் காரியதரிசி திரு. சி. ஆ. த. வடிவேலுவின் இல்லத்தில் வரவேற்பளிக்கப்பட்டது. மந்திரியிடம் சுருட்டுத் தொழிலாளரின் கஷ்டங்களையிட்டு ஒரு மகஜர் சமர்ப்பிக்கப்பட்டது. 3சத விகிதஉற்பத்தி வரியால் சுருட்டுத் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதை நீக்கவேண்டுமெனவும் மகஜரில் கோரப்பட்டுள்ளது.

நல்லூர் தொகுதி எம்.பி. டாக்டர் ஈ.எம்.வி. நாகநாதன், திரு. தர்மலிங்கம், அரசாங்க அதிபர் ஆகியோரும் மந்திரியுடன் வந்திருந்தனர்

# "கைத்தொழில் விருத்திக்கு அரசாங்கம் உதவும்"

## நீர்வேலியில் திரு. குணவர்த்தன

(நமது நிருபர் பாலா)

யாழ்ப்பாணம், திங்கள்

"சென்ற 9 வருடங்களிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் வளர்ச்சியிலோ, கைத்தொழில் அபிவிருத்தியிலோ அப்பொழுது பதவியிலிருந்த அரசாங்கம் கவனம் எடுக்கவில்லை. கைத்தொழில்களை வளர்க்க வேண்டுமென தனிப்பட்டவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்குக்கூட அந்த அம்மையாருடைய அரசாங்கம் குறுக்கேதானிருந்தது" என்று நீர்வேலி காமாட்சியம்பாள் கூட்டுறவு கைத்தொழில்சங்கம் மந்திரி திரு. குணவர்த்தனவுக்களித்த வரவேற்புக்குத் தலைமை வகித்துப்பேசிய கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை கூறினர்.

ஆங்கிலேயர் ஆட்சிசெலுத்திய காலத்தில்கூட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கைத்தொழில்துறையில் அக்கறை செலுத்தியது கிடையாது. அதே நிலை பின்னரும் தொடர்ந்து வந்திருக்கிறது. என்று கூறி மேலும் அவர் சொன்னதாவது:-

கைத்தொழில் துறையை விட விவசாயத்தில் தான் நாம் முன்னேறியிருக்கிறோம் வெங்காய விற்பனையில் அரசாங்கத்துக்குக்கிடைக்கும் வருமானத்தின் பெருந்தொகையும் இப்பகுதியிலிருந்துதான் கிடைக்கிறது. வாழைத் தோட்டங்களும் ஏராளமாகவுள்ளன. வாழைக்குலைகளைத் தவிர வாழை மரத்திலிருந்து அனேக பலனடையலாமெனக் கூறப்படுகிறது. வாழைத்தார்களைப் பற்றி ஆராய்ச்சிசெய்து அதிலிருந்து பொருட்களை உற்பத்திசெய்வதற்கான முறையில் வெளிநாடுகளிலிருந்து நிபுணர்களைத் தருவிக்க வேண்டும்.

எமது கைத்தொழில் நிலையங்களுக்கு உதவி கிடைத்தால் இன்னும் அவைகளை அபிவிருத்தி செய்யலாம். தொழில் நுட்பத் துறைக்கான இயந்திர சாதனங்களைத் தந்துதவவேண்டும்.

வரவேற்புக்கு மந்திரி குணவர்த்தன நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறியதாவது:

நீர்வேலி காமாட்சி அம்மாள் கூட்டுறவு நிலையத்துக்கு வந்து வேலைகளைப் பார்க்க வசதி செய்ததற்கு நன்றி. இந்த நிலையம் நாளாந்தம் பாவிக்கும் பொருட்களையும், விவசாய உபகரணங்களையும் உற்பத்தி செய்வது நல்லது. நவீன இயந்திரம் வேண்டுமென்ற உங்கள் கோரிக்கை நல்லதே.

நான் மந்திரியான ஒரு மாத காலத்திலும் முதன் முறையாக இப்படியானஒரு ஸ்தாபனம் தான் கடைச்சல் இயந்திரம் வேண்டுமெனக் கோரப்பட்டிருக்கிறது. எனது மந்திரிக் காரியாலயம் உங்களுக்கு இந்த கடைச்சல் இயந்திரத்தைக் கொண்டுவர எல்லா உதவிகளையும் செய்யும்.

கைத்தொழில் அபிவிருத்தி செய்வதிலும், இயந்திரங்களை இறக்குமதி செய்யவும் அரசாங்கம் உதவும்.

திரு. எஸ். தர்மலிங்கம் நன்றி கூறினர்.

தொழிற்சாலையின் பல பகுரகளையும், அங்கு உற்பத்தி செய்யப்பட்ட உருக்குச் சாதனங்களையும் மந்திரி பார்வையிட்டார்.

## செய்திக்கு ரஷ்யா மறுப்பு

அல்ஜியர்ஸ், அக். 31

அல்ஜியர்ஸ் மகாநாட்டில் கலந்து கொள்ளுமாறு ரஷ்யாவுக்கு அழைப்பு வந்தால் ரஷ்யக் தூதுக்குழு சோவியத் கம்யூனிஸ்ட்கட்சி முதல் காரியதரிசி பிரஸ்னேவ் தலைமையில் கலந்து கொள்ளும் என்று வெளியான செய்தியை ரஷ்ய தூதரகம் மறுத்துள்ளது.

(பி. டி. ஸி.)

பிகிங், அக். 31

அல்ஜியர்ஸ் மகாநாடு மூன்றுமாத காலத்துக்கு ஒத்திவைக்கப்பட்டு, அம் மகாநாட்டில் ரஷ்யாவும் கலந்து கொள்ளாவிட்டால் தாம் நிச்சயமாக அந்த மகாநாட்டில் பங்குபற்றுவதாக சீன, அல்ஜீரியாவுக்கு அறிவித்துள்ளது.

## கடனுதவி...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் செய்வோம் என்றெல்லாம் வெறும் உறுதிமொழிகள் கூறித் தாமதப்படுத்தாமல் அரசாங்கம் தீர்த்துவைக்கவேண்டும். இனியும் பிரச்னைகளைத் தள்ளிப்போடுவதில் பலனில்லை. எந்தப் பிரச்னையை—குறிபாக உங்களுடைய பிரச்னை போன்றவைகளை தீர்த்துவைக்கவேண்டும்.

உங்களுக்கு வசிக்க வசதியான வீடுகள் இல்லை. வள்ளங்களுக்கு போதிய பாதுகாப்பில்லை. யந்திரப்படகுகளுக்கு உதிரிப்பாகங்கள் கூட இல்லை. சுகாதார நிலையில் கூட வாழ்க்கை நடத்த முடியாதநிலையிலிருக்கிறீர்கள். மோசமாக இருப்பது குடிதண்ணீர்ப் பிரச்னே. எல்லாவற்றிற்கும் காரணம் உங்களுடைய பொருளாதாரம் கீழ்நிலையிலிருப்பது தான். இந்த நிலை தொடர்ந்து இருந்து வராமலிருக்க தேசியஅரசாங்கம் நடவடிக்கையெடுக்கும். எல்லாத் துறைகளிலும் வேண்டிய உதவியளிக்கும்.

'கடனுதவித் திட்டமொன்றின் மூலம் உதவியளிக்கத் தயாராகிக் கொண்டிருக்கிறோம். திட்டமிட்டமுறையில், உதவியளிப்பதே எமது நோக்கம்.

கூட்டமுடிவில் திரு. ஜோசப் நன்றி கூறினர்.

**வலித்துண்டல் வாசிகளுக்கு....**

கிரிமலைப் பகுதியிலுள்ள வலித்துண்டல் வாசிகள் அளித்த வரவேற்பில் பேசிய கைத்தொழில் மீன்பிடி மந்திரி திரு. பிலிப்குணவர்தன மீன்பிடிக்கும் பகுதிக்குச் செல்வதற்கான வகையில் நல்லதெரு அமைத்துக் கொடுக்கப்படுமெனவும், மீன்பிடித் தொழிலை அபிவிருத்திசெய்யக் கூடியவகையில் உதவி வழங்கப்படுமெனவும் உறுதியளித்தார்.

இக் கூட்டம் காங்கேசன் துறை பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது.

வலித்துண்டல் வாசிகள் சார்பில் பேசிய திரு. ஜோசப் அந்தப் பகுதியில் உள்ள கத்தோலிக்க தேவாலயம் அழிந்துவிடும்போலிருப்பதாகவும் அற்குப் பாதுகாப்பளிக்க அரசாங்கம் உதவவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். மேலும் தொடர்ந்து பேசுகையில் திரு. ஜோச கூறியதாவது;-

ஆலயத்துக்கு அண்மையில் கடல்வந்துவிட்டது. இப்போது சுமார் 25 அடி தூரம்வரையில்தான் கடல் நீர் இருக்கிறது. இப்படி இது தொடர்ந்து இருக்குமானல் ஆலயத்தையேகடல் விழுங்கிவிடும். புயலாலும் ஏற்கனவே இந்த ஆலயம் சேதப்பட்டிருந்தது.

மீன்பிடிக்கும் பகுதிக்குச் செல்வதற்கு தகுதியான ரஸ்தா வசதியில்லை. தற்போது இருக்கும் தெருவை கூடச் சிலர் வேலிகளினல் அடைந்துவிடுகிருர்கள். இந்நிலையில் தொழில் நடத்துவது கஷ்டமாகவிருக்கிறது.

சூருவளியாலும் எமக்குப் பெரும் சேதமேற்பட்டது. தோணிகளை இழந்துவிட்டோம். இனபந்துக்களை இழந்துவிட்டோம். இப்படி எம்மையே கஷ்டங்கள் எதிர் நோக்குகின்றன. இதனல் எம்மை கஷ்டங்களிலிருந்து விடுவிக்கும்வகையில் மந்திரி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## வடபகுதியின் ....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

சாலையைப் பார்வையிட்டார்.

**உடுப்பிட்டியில்**

கைத்தொழில் மீன்பிடி அமைச்சர் திரு. பிலி குணவர்த்தனவுக்கு உடுப்பிட்டி மக்கள் சார்பில் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. நெல்லியடி மஹாத்மா தியேட்டருக்கு அண்மையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டிருந்தனர். வரவேற்புக்கூட்டத்தில் அமைச்சர் திரு. பிலிப்குணவர்த்தன பேசியதாவது:-

"இலங்கையிலே ஒரு தொழிற் புரட்சி தோன்ற வேண்டும். பற்பல துறைகளிலும் பல தொழில்களும் தோன்ற வேண்டும். இன்று இலங்கையில் புவியியல் ஆராய்ச்சி செய்ததின் பயனக நாட்டுக்குத் தேவையான பொருளாதார வளங்கள் மிகுந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சுண்ணும்பு, களிப்பொருட்கள் முதலாகியன சிமெந்து தயாரிப்பதற்குத் தேவையான பொருட்கள் மிகுந்துள்ளன. இத்துறைகளில் நாம் ஒன்றுபட்டு உழைத்தோமானல் தொழிற்றுறையில் நல்ல எதிர்காலம் உண்டென்பது தெளிவு. காட்டு மரங்களை நாங்கள் நல்ல முறையில் பிரயோகிக்காமல் இருப்பது வருந்தத் தக்கது. வனங்களை அழித்து உபயோகமான மரங்களை வீண் விரயம் செய்யாமல் காட்டு மரங்களை வேறு நாட்டிற்கனுப்ப வேண்டும். நிலத்தில் கீழ் ஆராய்ச்சி செய்ததில் எண்ணை இருப்பதாகத் தெரிய வந்தது. வடக்கு, கிழக்கு தமிழ்மக்கள் எமது அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும்.

**வட்டுக்கோட்டையில்**

வட்டுக்கோட்டை இளைஞர் கைத்தொழில் நிலைய பொம்மைத் தொழிற்சாலைக்கு கைத்தொழில் மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன சனிக்கிழமை மாலை விஜயம் செய்திருந்தார். "இங்கு உற்பத்தி செய்யப்பட்ட பொம்மைகளின் தரம் மிகவும் உயர்ந்த நிலையிலுள்ளது. வெளிநாடுகளிலிருந்து பெருந்தொகையான பணத்துக்கு பொம்மைகள் இறக்குமதி செய்யப்பட்டது. இதுபோன்ற சிறு கைத்தொழில்களில் இளைஞர்கள் ஈடுபடுவதால் வெளிநாட்டு செலாவணியை மிச்சப்படுத்துவதோடு, வேலைவாய்ப்பும் ஏற்பட ஏதுவாகிறது. இதுபோன்ற கைத்தொழில் நிலையங்களுக்கு ஊக்கமளிக்க எமது தேசிய அரசாங்கம் ஒருபோதும் பின்னிற்காது" என மந்திரி இங்கு பேசுகையில் குறிப்பிட்டார். வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கமும் மந்திரியுடன் வந்திருந்தார்.

## குருநகர் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சமுதாயத்தை உருவாக்குவதற்காகவே ஸ்தாபிக்கப்பட்டது. எந்த நோக்கத்துக்காக அது உருவானதோ அதைச் செய்தே தீரும். அதற்கு மக்களாகிய உங்கள் ஒத்துழைப்புத் தேவை.

இருள் சூழ்ந்துள்ளகாலம் இப்போது அகன்றுவிட்டது. சென்ற அரசாங்கத்தின் அசிரத்தைக் குறைவால் நாடே பாழடைந்துவிட்டது. சிறிமா அரசாங்கம் எந்தப் பிரச்னையையும் சமாளிக்க முடியாமல் ஒரே குழப்பமாக்கிவிட்டிருக்கிறது. இனி நாம் அந்தத் தீங்குகளையெல்லாம் நீக்க முயலுவோமாக.

பலதரப்பட்ட பிரச்னைகள் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரச்னைகளை நான் அறியாதவனல்ல. சூருவளி வந்து கெடுதலிழைத்து இன்று 10 மாதங்களாகின்றன. இதுவரையிலும் உதவி வழங்கப்படாதது வருத்தத்துக்குரியது. காலம் கடந்த இந்த நேரத்தில் அரசாங்கம்வழங்கும் சிறு உதவி எதற்குத் தானென்று கூடத்தோன்றுகிறது. இன்றைய நிலையில் உதவியே வேண்டியதில்லை. புனர்வாழ்வுதான் வேண்டும், வாழ்க்கையில் பெரும் மாற்றங்களைச் செய்து கஷ்டமுறும் உங்களைப் புதிய மனிதர்களாக்க வேண்டும். இதைச் செய்வதற்கு என்னலான நடவடிக்கைகளை எடுப்பேன்.

## வானில் தெரியும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

இதுபற்றித் தாம் உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும் தெரிவித்தனர்.

"இந்த வால்வெள்ளியின் பலாபலன் என்ன?" என்று எமது நிருபர்களில் பலர் ஒரு கேள்வியை தமது செய்திகளின் அடியில் கொடுத்துள்ளனர்! கோடைக்கானலில் உள்ள வானிலை ஆய்வுகூட அதிகாரிகள் இம்மாதம் 28-ந் திகதி "இக்யி அஸேகி" என்ற வால்நட்சத்திரம் ஒன்று அதிகாலை 5 மணிக்குத் தெரிந்ததாகவும் 20 பாகையில் ஒடு வால் தெரிந்ததாகவும் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்ததாக 'ஹிந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. திருச்சியிலும் அதேதிமத்தில் வால் நட்சத்திரமொன்று தெரிந்ததாக திருச்சி விமான நிலைய அதிகாரிகளும் வால் நட்சத்திரத்தைக் கண்டதாகத் தெரிவித்திருந்தனரென அதே பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'இக்யி அஸேகி' என்ற தூமகேது (வால் நட்சத்திரம்) சென்ற மாதம் 21-ம் திகதி சூரியனுக்கு அணித்தாகச் சென்றதை தாம் பார்த்தாகவும் அது இரண்டாக வெடித்துப் பிளந்ததாகவும் ஜப்பானிய வானிலை ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. இரண்டாகப் பிளந்த வால்நட்சத்திரத்தின் ஒருபகுதிதான் இப்பொழுது தெரியும் வால் நட்சத்திரமோ எனச் சந்தேகிக்கப்படுகிறது.

## மழையில்லை

பளை, திங்கள்

சென்ற சில தினங்களாக இலங்கையின் சகலபாகங்களிலும் மழை பெய்ததாயினும் பளைப்பகுதியில் மழையில்லை, இதனல் இப்பகுதி விவசாயிகள் பெரும்பாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். பலர்மழையைநம்பி நெல்லை விதைத்து இறுதியில் மழையிலலாது போகவே ஏமாற்றமடைந்தனர். முளைத்த சிறு பயிர்கள் மழையில்லாமல் வாடுகின்றன. குளங்களில் சிறிதேனும் தண்ணீர் இல்லை.

## திறந்து கிடக்கும் தபால் பெட்டி!

மன்னர், திங்கள்

மன்னரில் புனித செபஸ்தியார் ஆலயத்துக்கு முன்பாக உள்ள தபால் பெட்டி சில நாட்களாக திறந்தபடி கிடக்கின்றது. இதனல் கடிதம் போட முடியாமல் செபஸ்தியார் வீதி, திருக்குடும்பக்கன்னியர் மடத்து வீதி, ஆஸ்பத்திரி வீதிகளில் வசிப்பவர் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர்.

## உணவுப் பொருட்கள் தட்டுப்பாடு

மன்னர், திங்கள்

மன்னர்ப் பகுதியிலுள்ள சில கடைகளில் அத்தியாவசியமான உணவுப்பொருட்கள் இருந்தும் கிடைப்பது அரிதாக இருக்கிறது, சில வியாபாரிகள் புளி இருந்தும் இல்லையென கைவிரிக்கின்றனர். இதுபற்றி மன்னர்ப் பொதுமக்கள் விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகரிடம் புகார் செய்துள்ளதாக தெரியவருகிறது.

## பண்டசாலையில் திருட்டு

சாவகச்சேரி, திங்கள்

சாவகச்சேரியைச் சேர்ந்த மட்டுவில் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் இரவு நேரத்தில் திருடர்கள் ஓட்டைக் கிளப்பி உட்புகுந்து பிடவை உட்பட பலபொருட்களைத் திருடியதாக அறியப்படுகிறது இதற்கு முன்னரும் இப்பண்டசாலையில் பலதடவை திருடர்கள் தங்கள் திறமையைக் காட்டியுள்ளனர்,

சாவகச்சேரிப் பொலிசார் புலன் விசாரணை செய்துவருகின்றனர், இதுவரையும் இதுசம்பந்தமாக எவரும் கைது செய்யப்படவில்லை.

## உழைப்பாளிகளை ...

(1-ம் பக்க தொடர்ச்சி)

ணம் லட்சுமிகாந்தன் (1 குழந்தை), பொன்னம் ராசமணி (4 குழந்தைகள் நான்கும் பெண்கள்) ஆகியவர்களும் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். மந்திரிக்கு எதிராகவுள்ள ஆசனங்களில் இவர்கள் தமது சிறுர்களுடன் அமர்ந்திருந்தார்கள்.

மீனவர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. ஸ்ரனிஸ்லாஸ் மீனவர்களுடைய கோரிக்கைகளை மந்திரிக்கு விளக்கிக் கூறினர்.

திரு. சாதுசிகாமணி நன்றி தெரிவிக்கையில் திரு. பிலிப் குணவர்த்தனவுக்கு 'தொழிலாளர் தந்தை' என்ற பட்டத்தைச் சூட்டுவதாகக் கூறினர்.



## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நல்லூர் செட்டித்தெருவில் கந்தசுவாமி கோவிலுக்கண்மையில் 6 பரப்பு 6 குளி வீடு கட்டக்கூடிய காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு சி. கனகரத்தினம், புறக்ரர் நல்லூர், யாழ்ப்பாணம்.

1326


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.